ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2422/38 - 2025 පෙබරවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.02.06
*2422/38 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 6/2017*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 8 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ண) மற்றும் (த்) என்னும் பந்திகளின்கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க.**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள் மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2025 , பெப்புருவரி 03.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு (வானூர்தி நிலைய வசதிகளுக்கான இறுப்பனவுகளை விதித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - PG 7021 — 374 (2025/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இரண்டாயிரத்துப் பத்தாமாண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி இதற்கான அட்டவணையின் நிரல் (II) இல் குறித்துரைக்கப்பட்ட வானூர்தி நிலையங்களில் வான்வழிச் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற அவ்வட்டவணையின் நிரல் (I) இல் குறித்துரைக்கப்பட்ட சேவை வழங்குநர், அத்தகைய வானூர்தி நிலையங்களையும் அத்தகைய வானூர்தி நிலையத்துடன் இணைந்துள்ள காணியையும் பயன்படுத்துவதற்காக அவ்வட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட இறுப்பனவைக் குடியியல் வான்செலவு அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

3. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக:-

"வானூர்தி நிலையங்கள்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 124 ஆம் பிரிவில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளை உடையதாதல் வேண்டும்

"வான்வழிச் சேவைகள்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வான்வழிச் சேவைகள் என்று பொருளாகும்.

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகார சபைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவுப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாரும்.

"சேவை வழங்குநர்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் பிரிவு 6(3) இன் கீழ் நியமிக்கப்பட்ட நியதிச் சட்டமுறையான சேவை வழங்குநர் என்று பொருளாகும்.

**அட்டவணை**

| *நிரல் (I)* | *நிரல் (II)* | *நிரல் (III)* |
|---|---|---|
| *சேவை வழங்குநர்* | *வான்வழிச் செலவு வசதிகள் மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள காணி* | *விதிப்பனவுகள்* |
| விமான நிலையங்கள் மற்றும் வான்செலவுச் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) (பிறைவேட்) லிமிட்டெட் | 1. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்<br>2. இரத்மலானை சர்வதேச விமான நிலையம்<br>3. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்<br>4. மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் | ஒவ்வொரு வானூர்தி நிலையத்துடனும் இணைந்துள்ள காணியின் இறுப்பனவுகள் ஒன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவான ரூபா 50,000.00) வருடாந்த இறுப்பனவு ஒவ்வோர் ஐந்தாண்டுக் காலப்பகுதியிலும் அத்தகைய இறுப்பனவின் பத்து சதவீதத்தை (10%) அதிகரிப்பதன் மூலம் இது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

EOG 02 - 0055

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.